அகழிகள் குறிப்பிட்ட அளவு அந்தப் பகுதியிலே வெட்டப்பட்டிருக்கின்றன. ஏதாவது பகுதிகளைக் குறிப்பிட்டுச் சொன்னால், உடனடியாக அந்தப் பகுதியிலே அகழிகள் வெட்டும் பணி மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா, வெங்கடாசலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

104—

மாசுபடுதல்

***36110—திருமதி ர. சுபா:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, சார்வாய் கிராமத்திலுள்ள சேகோ தொழிற்சாலையின் கழிவு நீரால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித பொற்பாதங்களைப் பணிவோடு வணங்குகிறேன்

கெங்கவல்லி தொகுதி, சார்வாய் கிராமம் சேகோ தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசினைத் தடுக்க மாசு கட்டுப்பாடு வாரியம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது. சார்வாய் கிராமத்தில் இயங்கும் 7 சேகோ தொழிற்சாலைகளும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து, முறையாக இயக்கி, வாரியம் நிர்ணயித்த தர அளவிற்கு உட்பட்டு சுத்திகரிப்பு செய்து, பின்னர் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தி வருகின்றன. மேலும், சேகோ தொழிற்சாலைகள் தொடர்பாகப் பெறப்படும் புகார்களுக்கு உடனுக்குடன் தமிழ்நாடு மாசு

கட்டுப்பாடு வாரியம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. சுபா அவர்கள்.

திருமதி ஏ. சுபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெங்கவல்லி தொகுதி, சார்வாய் கிராமத்திலுள்ள சேகோ தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரால் சுற்றுச்சூழல், குடிநீர் மற்றும் நிலத்தடி நீர் மாசுபடாதவாறு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து, அந்த மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து நல்ல குடிநீராக அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, சேகோ தொழிற்சாலையினுடைய கழிவுநீரில் கரைந்த நிலையிலுள்ள உப்புகளினுடைய அளவு குறைவாக இருப்பதால், இயற்கைச் சுத்திகரிப்பு செய்வது மிகவும் எளிமையானது. அந்தக் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்ட பின்னாலே, விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. சுத்திகரிப்பு செய்யாமல் கழிவுநீரை வெளியேற்றுகிற தொழிற்சாலைகளை கண்காணித்து வாரியம் நிர்ணயித்த தர அளவை மீறும் பட்சத்திலும், கழிவுநீரை வெளியேற்றும்பட்சத்திலும் தொழிற்சாலைகளை மூடுவதற்கும், மின் இணைப்பைத் துண்டிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி, 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டிலே, சென்னையிலுள்ள ஐ.ஐ.டி. நிறுவனத்தில் தொழில்நுட்ப செயல்விளக்க மையம் ஏற்படுத்தப்பட்டு, 60-க்கும் மேற்பட்ட சேகோ தொழிற்சாலைகளுக்கு, 2 நாட்கள் கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் மேலாண்மைப் பயிற்சி அளித்ததோடு, சிறந்த ஆலோசனைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. இதன்மூலமாக

சார்வாய் கிராமத்தில் கழிவு நீரால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவது கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொது சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். இருக்கின்ற சேகோ தொழிற்சாலைகள் அனைத்திலும், அவரவர்களால், தனிப்பட்ட முறையிலே, சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே, பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.*

திருமதி ர. சுபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே, சேலம் மாவட்டத்தில், அதிகப்படியான சேகோ தொழிற்சாலைகள் உள்ளன. இந்தத் தொழிற்சாலைகளில் ஜவ்வரிசி தயாரிக்கப்பட்டு வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. இது மருத்துவம் மற்றும் உணவுப் பொருள் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகின்றது. சேகோ தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரிலிருந்து மின்சாரம் தயாரித்து, அந்த மின்சாரத்தை சேகோ தொழிற்சாலையிலே பயன்படுத்திக்கொள்ளும் வகையில், மத்திய அரசிடமிருந்து உரிய மானியம் பெற்றுத் தர தமிழக அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என்டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Bio Methanation *மூலமாக காற்றுவி தெளிப்பான்கள் அமைத்து அதன்மூலம் கழிவுநீரை சுத்திகரிக்கும்போது, அதிலிருந்து வெளிவருகின்ற மீத்தேன் வாயுவினை சேகரித்து, அது தொழிற்சாலையினுடைய எரிபொருள் உபயோகத் தேவைக்கோ அல்லது மின்சாரத் தேவைக்கோ பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அனைத்து சேகோ தொழிற்சாலைகளும் தங்களுடைய சொந்த செலவிலே சுத்திகரிப்பு நிலையம் அமைத்திருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற கோரிக்கை தேவையில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

4. தலைவர் கோரம்

காஞ்சிபுரம் மாவட்டம், மௌலிவாக்கத்தில் தனியார் கட்டடம் இடிந்து விழுந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014-2015 (குறுக்கீடுகள்) இருங்கள். ஒவ்வொருவராகச் சொல்லுங்கள். என்ன? திரு. மோகன்ராஜ், (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஸ்டாலின், சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மௌலிவாக்கம் பிரச்சினை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். (குறுக்கீடுகள்)

(தேசிய முற்போக்கு திராவிட கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்டு கட்சி, இந்திய தேசிய காங்கிரஸ், மனித நேய மக்கள் கட்சி, புதிய தமிழகம் ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். நான் பேசுகின்றேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். நான் சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் சொல்கிறேன். நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சொல்கிறேன். அதாவது, சட்டப்படி